தினமணி

Monday, February 06, 2012

# பயிர்க் கடன்களை ரத்து செய்ய வேண்டும்: ராமதாஸ்

First Published : 06 Feb 2012 12:48:47 AM IST

சென்னை, பிப்.5: புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் விவசாயிகளின் பயிர்க் கடன்களையும் ரத்து செய்ய வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

விவசாயிகள் வாங்கிய கடனில் நிலுவையாக உள்ள ரூ.440 கோடியை, குறுகிய காலக் கடன்களை மத்தியக் காலக் கடன்களாகவும், மத்தியக் காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாகவும் மாற்றி, புதிய கடனும் வழங்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா சனிக்கிழமை சட்டப்பேரவையில் அறிவித்தார்.

அந்தக் கடன் தொகையை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டும் என ராமதாஸ் கோரியுள்ளார்.

இது தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

""புயலால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன் ரூ.790 கோடி செலவில் சிறப்பு தொகுப்புத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

துயரத்தில் வாடும் உழவர்களுக்கு உதவும் நோக்குடன் அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் வரவேற்கத்தக்கது. உழவர்களுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கப்படுவது, 5 ஆண்டுகளுக்கான பராமரிப்பு செலவை அரசே ஏற்பது, பாசன வசதிகள் செய்து தரப்படுவது போன்ற சலுகைகளைத் தமிழக அரசு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

உழவர்கள் செலுத்த வேண்டிய நிலவரி முழுவதுமாக ரத்து செய்யப்படுவது, உழவர்கள் பெற்றக் கடன்களின் திரும்பச் செலுத்தும் காலம் அதிகரிக்கப்படுவது என்றும் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

எனினும் உழவர்களின் இழப்பை ஈடுகட்ட இந்த நடவடிக்கைகள் மட்டுமே போதுமானது இல்லை.

முந்திரி, பலா சாகுபடி செய்பவர்களுக்கு அந்தப் பயிர்கள் முழுமையாகப் பயன்தரத் தொடங்கும் வரை பராமரிப்புச் செலவை வழங்க முன்வர வேண்டும். தமிழக அரசு இதுவரை ரூ. 1,800 கோடி அளவுக்கு சலுகைகளை அறிவுத்துள்ள நிலையில், கூடுதலாக கூட்டுறவு வங்கிகளில் உழவர்கள் பெற்றுள்ள பயிர்க் கடனான ரூ. 440 கோடியை ரத்து செய்வதால் அரசுக்குச் சுமை ஏற்படாது" என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

------------------------------------------------------------------------------------------------------------

## புயல் பாதித்த மாவட்டங்களாக அறிவிப்பு: நில வரி ரத்து

First Published : 05 Feb 2012 12:00:00 AM IST



சென்னை, பிப். 4: புயல் பாதிப்புக்குள்ளான கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள், புயல் பாதித்த மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், அந்த மாவட்ட விவசாயிகளின் நில வரி முழுமையாக ரத்து செய்யப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

சட்டப் பேரவையில் முதல்வர் பேசியது: விவசாயிகளுக்காக மறுசீரமைப்பு சிறப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக, வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்

பொறியியல், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கு வசதியாக கூடுதல் ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலரை தலைவராகக் கொண்ட ஒரு திட்ட மேலாண்மை மையம் கடலூரில் ஏற்படுத்தப்படும்.

இந்த திட்ட மேலாண்மை மையத்துக்குத் தேவையான களப் பணியாளர்களும் பணி அமர்த்தப்படுவர்.

**நில வரி ரத்து:** புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் ""புயல் பாதித்த மாவட்டங்கள்" என்று அறிவிக்கப்படும். அதன் மூலம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் நில வரி முழுமையாக ரத்து செய்யப்படும்.

மேலும் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்று நிலுவையில் உள்ள ரூ.440.11 கோடி அளவிலான விவசாயிகளின் குறுகிய கால கடன் மத்திய கால கடனாகவும், மத்திய கால கடன் நீண்ட கால கடனாகவும் மாற்றப்படும். விவசாயிகளுக்குப் புதிய பயிர்க் கடன்கள் வழங்கப்படும். இதன் மூலம், சுமார் 1.10 லட்சம் விவசாயிகள் பயன் பெறுவர் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

---

## கடலூர்-விழுப்புரம் மாவட்டங்களுக்கு ரூ.790 கோடியில் வேளாண் சிறப்பு திட்டங்கள்

First Published : 05 Feb 2012 12:00:00 AM IST



சென்னை, பிப். 4: புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ரூ.790 கோடிக்கு வேளாண் சிறப்பு திட்டங்களை முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

சட்டப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு சனிக்கிழமை பதிலளித்து முதல்வர் ஜெயலலிதா பேசியது:

புயலால் பாதிக்கப்பட்டு நெல், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் போன்ற பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு சான்று விதைகள், உயிர் உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியன அடங்கிய சிறுதளை (மினி கிட்) இலவசமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. அவை மட்டும் விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்குப் போதுமானதாக இருக்காது. எனவே, விரிவான ஒரு நிவாரண

தொகுப்பினை வழங்க முடிவு செய்துள்ளேன். அதன்படி, சிறப்பு நிவராண தொகுப்பு உதவி அறிவிக்கப்படுகிறது.

ஆண்டுப் பயிருக்கான சிறப்பு தொகுப்பு திட்டம் (வேளாண் பயிர்கள்):

புயல் பாதித்த மாவட்டங்களில் 54 ஆயிரத்து 490 ஏக்கர் பரப்புக்குத் தேவையான நெல் சிறுதளைகள், 20 கிலோ விதை நெல், இரண்டு பொட்டலங்கள் உயிர் உரங்கள் மற்றும் 500 மில்லி தாவர பூச்சிக்கொல்லி கொண்டவையாக இந்த சிறுதளைகள் இருக்கும்.

6 ஆயிரத்து 250 ஏக்கர் பரப்புக்குத் தேவையான மக்காச்சோள சிறுதளைகள் விழுப்புரம் மாவட்டத்தில் வழங்கப்படும். இந்தச் சிறுதளை 6 கிலோ வீரிய ஒட்டு விதை மற்றும் இரண்டு பொட்டலங்கள் உயிர் உரங்கள் உள்ளதாக இருக்கும்.

3 லட்சத்து 83 ஆயிரத்து 660 ஏக்கர் பரப்புக்குத் தேவையான பயறு வகை சிறுதளைகள் வழங்கப்படும். 80 கிலோ விதைகள், நான்கு பொட்டலங்கள் உயிர் உரங்களுடன் 500 மில்லி தாவர பூச்சிக்கொல்லி இந்தச் சிறுதளையில் இருக்கும். இந்தச் சிறுதளைகள் ரூ.34.86 கோடி செலவில் அளிக்கப்படும்.

தோட்டக்கலைப் பயிர்கள்: வரும் மார்ச் மாதம் சாகுபடி செய்வதற்கு வசதியாக உயர் மகசூல் தரக் கூடிய வீரிய ரக காய்கறி விதைகள், உயிர் உரங்கள் மற்றும் தாவர பூச்சிக்கொல்லிகள் அடங்கிய சிறுதளைகள் வழங்கப்படும். இதற்கு ஏக்கருக்கு ஆயிரத்து 540 ரூபாய் செலவாகும்.

நீண்ட கால பயிர்களுக்கான சிறப்பு தொகுப்புத் திட்டம் (தென்னை): கடலூர் மாவட்டத்தில் ஆயிரத்து 284 ஹெக்டேரிலும், விழுப்புரத்தில் 578 ஹெக்டேரிலும் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டன. முறிந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்த மரத்துக்கு ரூ.500 வீதம் தென்னை விவசாயிகளுக்கு வழங்கப்படும். அதற்கென ரூ.16.03 கோடி நிதி ஒதுக்கப்படும். மேலும், 100 சங்கிலி ரம்பங்கள் வாடகையில்லாமல் வழங்கப்படும்.

தென்னை மரங்களை இழந்த விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்துக்கு ஊடு பயிர் பயிரிடும் வகையில், அதற்கான சிறுதளைகள் வழங்கப்படும். தென்னங்கன்றுகளை மீண்டும் நடுவதற்காக தென்னை நாற்றுப் பண்ணைகளில் இருந்து 3 லட்சத்து 20 ஆயிரத்து 600 தென்னங்கன்றுகள் ரூ.80 லட்சத்தில் வழங்கப்படும்.

மீண்டும் நடப்பட்ட தென்னை மரங்களுக்குத் தேவையான உரங்கள் மற்றும் தென்னை நுண்ணூட்டக் கலவை ஆகியன வழங்கப்படும். இதற்காக 5 ஆண்டுகளில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.73,859-ம், 5 ஆண்டுகளில் ரூ.13.53 கோடியும் செலவாகும். இதனால், 7 ஆயிரத்து 83 விவசாயிகள் பயன்பெறுவர்.

முந்திரி மற்றும் பலா தோப்புகள் பாதிப்புக்கு உள்ளான விவசாயிகள் விழுந்த மரங்களை அகற்ற தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்காக, அந்தத் திட்டத்தில் இருந்து சராசரியாக ஏக்கருக்கு ரூ.6 ஆயிரம் வழங்கப்படும்.

இதற்காக ரூ.54.78 கோடி செலவாகும். இந்த மரங்களை வெட்டுவதற்குத் தேவையான கருவிகள் வாடகை இல்லாமல் அளிக்கப்படும். மரங்கள் வெட்டி எடுக்கப்பட்ட பின், அடிக்கட்டையையும் அகற்றிய பின்னரே அந்தத் தோட்டங்களில் உழவுப் பணியும், ஊடுபயிர் சாகுபடியும் மேற்கொள்ள இயலும். எனவே, அந்தப் பணி ரூ.136.94 கோடியில் மேற்கொள்ளப்படும்.

91 ஆயிரத்து 293 ஏக்கர் பரப்பில் பாதிப்புக்குள்ளான நிலங்களில் வேளாண் பொறியியல் துறை மூலம் உழவுப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்காக ஏக்கருக்கு ரூ.400 வீதம் ரூ.3.65 கோடி செலவு ஏற்படும்.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மூலமாக மரக்கன்றுகள் நடத் தேவையான குழிகள் எடுத்தல் மற்றும் நடவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டத்துக்கு ரூ.31.50 கோடி செலவிடப்படும்.

சாகுபடிக்கான உதவி: ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 103 ஏக்கர் பரப்பில் மறு சாகுபடி செய்யத் தேவையான உதவிகள் வழங்கப்படும். 70 லட்சம் ஒட்டு முந்திரி கன்றுகள் மற்றும் இதர மரக்கன்றுகள் வழங்கப்படும். உயிர் உரம் மற்றும் தாவர பூச்சிக்கொல்லி மருந்துகளும் அளிக்கப்படும். இதற்கென முதல் ஆண்டில் ரூ.47.82 கோடி செலவு ஏற்படும்.

நீர்ப்பாசன உதவிகள்: 25 ஏக்கருக்கு ஒன்று என்ற வீதத்தில் ஆழ்துளை சமுதாயக் கிணறு அமைக்க வழிவகை செய்யப்படும். இந்த ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க சிறு-குறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 25 சதவீதம் மானியமும் வழங்கப்படும். இதற்காக ரூ.27 கோடி செலவாகும்.

நீர் பாசன ஆதாரம் ஏதுமில்லாத விவசாயிகளுக்கு, கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றுவதற்கான செலவினம் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மூலம் 4 மாதங்களுக்கு மேற்கொள்ளப்படும். அதற்காக ரூ.62.57 கோடி செலவாகும்.

முந்திரிக் கன்றுகள் மறு நடவு செய்யும் இடங்களில் நீர் ஆதாரம் உள்ள இடங்களில் நுண்ணீர் பாசன வசதி ஏற்படுத்த இயலும். சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நுண்ணீர் பாசன வசதி ரூ.9.12 கோடி மதிப்பில் ஏற்படுத்தித் தரப்படும். முந்திரி, பலா, மா போன்ற பாதிக்கப்பட்ட நீண்ட கால பயிர்கள் மீண்டும் பயிர் செய்வதற்கான உதவிகள் செய்யப்படுகின்றன. ஆனாலும் அவை பலன் தர சில ஆண்டுகள் ஆகும்.

எனவே, ஊடு பயிர் பயிரிடுவதற்கான உதவிகள் அளிக்கப்படும். அதன்படி, சுமார் 91 ஆயிரம் ஏக்கர் பரப்பில் ஊடுபயிர் பயிரிடுவதற்கான சிறுதளைகள் ரூ.13.88 கோடியில் வழங்கப்படும்.
பழுதான கன்றுகளை நீக்கி, புதிய கன்றுகளை நடவும், ஆண்டுதோறும் உரங்கள், உயிர் உரங்கள் தாவர பூச்சிக்கொல்லிகள் மற்றும் இடைவெளி சாகுபடி பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளுக்கு ரூ.334.60 கோடி செலவிடப்படும்.
வேளாண் பயிர்களுக்கு ரூ.65.22 கோடியும், தோட்டக் கலைப் பயிர்களுக்கு ரூ.724.96 கோடி என மொத்தம் ரூ.790.18 கோடி செலவில் சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

---------------------------------------------------------------------------------------------------------

**கொப்பரை தேங்காயில் சல்பர் பவுடர்**

பிப்ரவரி 06,2012,02:19 IST

ஈரோடு: கொப்பரை தேங்காய் அழுகலை தடுக்கவும், நல்ல கலர் பெருவதற்காகவும் விவசாயிகள் சல்பர் பவுடரை பயன்படுத்துகின்றனர்.
ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறை, வெள்ளோடு, மொடக்குறிச்சி, சிவகிரி, அரச்சலூர், கவுண்டச்சிபாளையம், முத்தம்பாளையம் போன்ற பகுதியில் தேங்காய் அறுவடை செய்து, தேங்காய் பருப்பு தயாரித்து வருகின்றனர். தவிர, காங்கேயம் பகுதியில் தேங்காய் உற்பத்தி அதிகம் என்பதால், தேங்காய் அரவை மில்கள் அதிகம் உள்ளன. இங்கு, வியாபாரிகள் மற்றும் ஆயில் நிறுவன உரிமையாளர்கள் தென்னை தோட்டங்களுக்கு சென்று நேரடியாக தேங்காய் வாங்கி செல்கின்றனர். சில விவசாயிகளே, தோட்டத்தில் விளையும் தேங்காயை வைத்து தேங்காய் பருப்பு தயாரிப்பில் முனைப்பு காட்டுகின்றனர். தேங்காயில் அதிக எண்ணெய் பசை உள்ளதால், வெயிலில் உலர வைக்கும்போது எளிதில் அழுகி விடுகிறது.
அதை தவிர்க்கும் பொருட்டு, ஆயிரம் தேங்காய்க்கு 50 கிராம் "சல்பர் பவுடர்' பயன்படுத்துகின்றனர். இதனால், ஆயிரம் தேங்காயில் 10 கிலோவுக்கும் குறைவான அளவு தேங்காய்தான் வீணாகும்.
பவுடர் பயன்படுத்தாமல் வெயிலில் உலர வைத்தால், பாதிக்கு பாதி அழுகிவிடும். தவிர, பருப்பு நல்ல கலராக இருக்க இதை பயன்படுத்துகின்றனர்.
எச்.பி.சி., இயற்கை மருத்துவமனை டாக்டர் சத்தியமூர்த்தி கூறிகையில், ""தேங்காய் எண்ணெய் உணவுக்கும், தலை முடிக்கும் அதிகளவு மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். அதில், எண்ணெய் தயாரிக்கும் முன் தேங்காய் அழுகாமல் இருக்க

சல்பர் பவுடர் பயன்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது. இதனால், வயிற்று போக்கு, அஜீரணம், முடி கொட்டுதல் போன்ற உடல் ரீதியாக பல்வேறு பிரச்னைக்கு ஆளாகின்றனர்," என்றார்.
கல் வைத்து மாம்பழங்களை பழுக்க வைக்கும்போது, சுகாதாரத்துறையினர் களத்தில் இறங்கி சோதனை நடத்தி அவற்றை அழிப்பதுபோல, சல்பர் கலந்த தேங்காய்களையும் கண்டறிந்து அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## வேளாண்மை அதிகாரி ஆய்வு

**பதிவு செய்த நாள்** : பிப்ரவரி 05,2012,22:32 IST

**கருத்தை பதிவு செய்ய**

**திருப்புல்லாணி** :திருப்புல்லாணி புக்குளம் பகுதியில் தேசிய பாதுகாப்பு உணவு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திருத்திய நெல் சாகுபடி செயல்விளக்க திடல்களையும் வீரிய ஒட்டு ரக நெல்சாகுபடி திடல்களையும் டில்லி வேளாண்மை ஆலோசகர் மாலிக் ஆய்வு செய்தார். வேளாண்மை இணை இயக்குனர்கள் ராஜேந்திரன், சக்திமோகன், உதவி இயக்குனர்கள் கமால்தீன்,வேளாண் அலுவலர்கள் ஷேக்அப்துல்லா, கோபாலகிருஷ்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

---

## வாரச்சந்தை திட்டப் பணிகளை செய்ய எதிர்ப்பு : தியாகதுருகத்தில் திடீர் பரபரப்பு

**பதிவு செய்த நாள்** : பிப்ரவரி 06,2012,00:54 IST

**கருத்தை பதிவு செய்ய**

**தியாகதுருகம்** : தியாகதுருகம் வாரச் சந்தை விஸ்தரிப்பு பணிகளை பிரிதிவிமங்கலம் பொதுமக்கள் தடுத்து நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. தியாகதுருகம் பஸ் நிலையத்தையொட்டியுள்ள இடத்தில் சனிக்கிழமை தோறும் வார சந்தை நடக்கிறது. இதையொட்டி பிரிதிவிமங்கலம் ஊராட்சிக்கு சொந்தமான மேல்பூண்டிதக்கா ஏரியின் நீர்பிடிப்பு பகுதி உள்ளது. இதனால் சந்தை நடக்கும் பகுதி யாருக்கு சொந்தம் என்பதில் பல ஆண்டுகளாக பிரச்னை உள்ளது. இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது. இந்நிலையில் எம்.எல்.ஏ., தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் வார சந்தை விஸ்தரிப்பு பணிக்காக 8.25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான பணிகள் நேற்று காலை சந்தைமேடு பகுதியில் துவங்கியது. டிப்பர் மூலம் கிராவல் மண் கொட்டப்பட்டு பொக்லைன் மூலம் சமன்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.
இதையறிந்த பிரிதிவிமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் அப்துல் சத்தார் தலைமையில் அங்கு வந்த பொதுமக்கள், பணிகளை தடுத்து நிறுத்தினர். சந்தை நடக்கும் பகுதி தங்கள் ஊராட்சிக்கு

சொந்தமானது என்றும், இதன் வழக்கு உயர்நீதிமன்றத்தில் நடந்துவருவதால் தீர்ப்பு வெளியாகும் வரை இப்பகுதியில் எவ்வித திட்டப்பணிகளும் மேற்கொள்ளக்கூடாது என்றும் கூறினர்.
இதனால் பேரூராட்சி ஊழியர்கள் மற்றும் பொதுமக்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.
முறையான பதிவேடுகளை காண்பித்துவிட்டு நாளை (இன்று) பணிகளை மேற்கொள்வதாக கூறிவிட்டு, பேரூராட்சி ஊழியர்கள் அங்கிருந்து சென்றனர்.
இதனால் நேற்று மதியம் பஸ் நிலையம் அருகே சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

---

## வேளாண் பல்கலையில் இளமை மலர்ந்தது

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2012,00:08 IST

கருத்தை பதிவு செய்ய
கோவை :கல்லூரி நினைவுகள், சககால நிகழ்வுகளை பகிர்ந்து கொண்ட, வேளாண் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள், இளமைக்காலத்தை திரும்பி பார்த்தனர்.
கோவை,வேளாண் பல்கலைக் கழக முன்னாள் மாணவர்கள் சந்திப்பு, பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. முன்னாள் மாணவர் ஆறுமுகம் வரவேற்றார். கடந்த 1971-72ம் ஆண்டு படிப்பை முடித்த, மாணவர்கள் 80 பேர், தங்கள் குடும்பத்துடன் பங்கேற்றனர். கல்லூரி பருவத்திற்குரிய குறும்பு பேச்சுகளை பேசி, மட்டற்ற ஆனந்தம் அடைந்தனர். முன்னாள் மாணவருக்கு ,கற்பித்த ஆசிரியர்கள் கவுரவிக்கப்பட்டனர். தங்களுடன் படித்த, 40 மாணவர்களின் இறப்புக்கு, மவுன அஞ்சலி அனுசரிக்கப்பட்டது.
சக மாணவர் மற்றும் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற, பல்கலைக் கழக துணைவேந்தர் முருகேச பூபதி கூறியதாவது:

நாற்பது ஆண்டுக்குப் பின், குழந்தைகள், பேரன் பேத்தியுடன், எல்லோரும் சந்தித்தது சிறப்புக்குரியது. எல்லோரும், 60 வயதை கடந்துவிட்டோம். எங்களுக்கு கல்வி கற்றுக்கொடுத்த ஆசிரியர்களையும் அழைத்துள்ளோம். " என்றார்.
முன்னாள் மாணவர் பொன்னுசாமி நன்றி கூறினார்.

---

## விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம், மருந்து வழங்கல்: அமைச்சர்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2012,02:55 IST

கருத்தை பதிவு செய்ய
ஆத்தூர்: ""விவசாயிகளுக்கு, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, ஸ்பிரேயர், டிராக்டர் உள்ளிட்டவை மானிய விலையில் வழங்கப்படுகிறது," என, விழாவில், அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி பேசினார்.
கவர்பனை, திட்டச்சேரி, பகடப்பாடி ஆகிய கிராமங்களில், தமிழக நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி, பயனாளிகளுக்கு அரசின் விலையில்லா பொருட்களை வழங்கி பேசியதாவது:
தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதி திட்டங்களை, 15 நாட்களுக்குள், ஒரு கோடியே, 85 லட்சம் ரேஷன் கார்டு, விலையில்லா அரிசியை முதல்வர் வழங்கினார். தமிழகத்தில், நிதி

பற்றாக்குறையாக உள்ளது.
தி.மு.க., ஆட்சியில், கஜானா காலி செய்யப்பட்டது. அதை பொருட்படுத்தாமல், கிராமத்தில் வாழும் பெண் தொழிலாளர்கள் மேம்பாடு அடைய, ஆடு மற்றும் கறவை மாடுகள் வாங்கிக் கொடுக்கப்படுகிறது.
மாணவ, மாணவியருக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆஸ்பிட்டாஸ் மேற்கூரை உள்ள அங்கன்வாடி மைய கட்டிங்கள், கான்கிரீட் கட்டிடங்களாக மாற்றம் செய்யப்பட்டு, சுகாதார வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடம் கட்டித்தரப்பட உள்ளது.
விவசாயிகளுக்கு, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, ஸ்பிரேயர், டிராக்டர் உள்ளிட்டவை மானிய விலையில் வழங்கப்படுகிறது. சொட்டு நீர் பாசனம் நூறு சதவீதம் மானியத்துடன் வழங்கப்படுகிறது.
இவ்வாறு பேசினார்.
முன்னதாக, கவர்பனையில், 519 பேருக்கும், திட்டச்சேரியில், 797 பேருக்கும், பகடப்பாடியில், 409 பேர் என, 1,725 பயனாளிக்கு, 90 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பில், விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் ஃபேன் உள்ளிட்வைகளை வழங்கினார்.
விழாவில், டி.ஆர்.ஓ., பிரசன்ன வெங்கடேசன், ஆத்தூர் ஆர்.டி.ஓ., செல்வராஜ், கெங்கவல்லி தாசில்தார் ரமேஷ்பாபு, மாவட்ட பஞ்சாயத்து சேர்மன் சதீஷ்குமார், யூனியன் சேர்மன்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---------------------------------------------------------------------------------------------------------------

## விவசாயிகளுக்கான பயிற்சி முகாம்

**பதிவு செய்த நாள்** : பிப்ரவரி 06,2012,01:02 IST

**கருத்தை பதிவு செய்ய**

மேலூர் :மேலூர் அருகே கோட்டநத்தம்பட்டியில் அட்மா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி முகாம் நடந்தது.
வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம் தலைமை வகித்தார். ஊராட்சித்தலைவர் கந்தப்பன் முன்னிலை வகித்தார். துணை வேளாண் அலுவலர் அசோகன் வரவேற்றார்.
உற்பத்தி திறன் இரண்டு மடங்காகவும், வருவாய் மூன்று மடங்காகவும் அதிகரித்திட தேவையான தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது. திருந்திய நெல் சாகுபடி, திருந்திய பயறு சாகுபடி, திருந்திய கரும்பு சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து உதவி இயக்குனர் கணேசன் கூறினார்.
காளான் வளர்ப்பு குறித்து நட்ராயன், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை குறித்து பெரிய புலியன், மீன் வளர்ப்பு குறித்து மீன் வளத்துறை ஆய்வாளர் வசந்தராஜன், தோட்டக்கலை திட்டங்கள் குறித்து நாகராஜன் பேசினர்.

---------------------------------------------------------------------------------------------------------------

## உழவர் பாதுகாப்பு திட்ட பட்டியல் பார்வைக்கு வைப்பு

**பதிவு செய்த நாள்** : பிப்ரவரி 06,2012,02:24 IST

**கருத்தை பதிவு செய்ய**

நாமக்கல்: "உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், உறுப்பினர் கணக்கெடுப்பு பட்டியல், அந்தந்த வி.ஏ.ஓ., அலுவலகத்தில், மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது' என, மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும், உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினர் கணக்கெடுக்கும் பணி, ஜனவரி 31ம் தேதியுடன் முடிவடைந்தது. அதையடுத்து, ஃபிப்ரவரி 1ம் தேதி முதல் கணக்கெடுப்பு பட்டியல், வி.ஏ.ஓ., அலுவலகத்தில், மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.
அந்த பட்டியலை, மக்கள் பார்வையிட்டு தகுதி அடிப்படையில் தங்களது பெயர் விடுபட்டிருந்தாலோ அல்லது தவறுதலாக தகுதியில்லாத நபர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருந்தாலோ, வரும் 8ம் தேதிக்குள் வி.ஏ.ஓ.விடம் மனு செய்ய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

--------------------------------------------------------------------------------------------------------

## பயறு வகை பயிர்களுக்கு விலையில்லா தெளிப்புநீர் பாசனம்

**பதிவு செய்த நாள்** : பிப்ரவரி 06,2012,02:04 IST

**கருத்தை பதிவு செய்ய**
களக்காடு:பயறு வகை பயிர்களுக்கு விலையில்லா தெளிப்புநீர் பாசனம் வழங்கப்படுவதாக வேளாண் அதிகாரி தெரிவித்தார்.இதுகுறித்து களக்காடு வேளாண்மை உதவி இயக்குநர் வேல்சாமி அறிக்கையில் கூறியிருப்பதாவது:பயறு வகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பயறு வகைகளுக்கு தெளிப்பு முறையில் நீர்பாசனம் செய்ய தெளிப்புநீர் பாசன கருவிகள் விலையில்லாமல் வழங்கப்படுகிறது. வேளாண்மைத்துறை மூலம் பயறு வகைகளுக்கு நுண்ணீர் பாசனம் என்ற திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மட்டுமே இந்த தெளிப்புநீர் பாசன கருவிகள் வழங்கப்படுகிறது.இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தாசில்தாரிடம் பெறப்பட்ட சிறு அல்லது குறு விவசாயி என்ற சான்றிதழ், பட்டா நகல், பயிர் அடங்கல் நகல், குடும்ப அட்டை நகல், மின்கட்டண அட்டை நகல் போன்ற ஆணவங்களுடன் களக்காடு வேளாண்மை விரிவாக்க மையத்திலுள்ள வேளாண்மைத்துறை அதிகாரிகளை அணுகி பயன்பெறலாம்.இத்திட்டத்தின் கீழ் மழைத்தூவான் (ரெயின்கன்) பாசன அமைப்புக்கு அதிகபட்சமாக 24 ஆயிரத்து 940 ரூபாயும், தெளிப்புநீர் பாசன அமைப்புக்கு அதிகபட்சமாக 16 ஆயிரத்து 993 ரூபாயும் அரசு உழவர்கள் நலனை முன்னிட்டு வழங்கவுள்ளது.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

--------------------------------------------------------------------------------------------------------

## விவசாயிகளை குளிர வைத்தவர் ஜெ.,: அமைச்சர் செங்கோட்டையன் பேச்சு

**பதிவு செய்த நாள்** : பிப்ரவரி 06,2012,01:27 IST

**கருத்தை பதிவு செய்ய**
தஞ்சாவூர்: ""முதல்வர் ஜெயலலிதாவுக்கும், காவிரி டெல்டா மாவட்டங்களுக்கும், ஒரு ஒற்றுமை இருக்கிறது. ஜூன் 6ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு, தண்ணீர் திறந்து விட்டு, விவசாயிகளை, "குளிர' வைத்தவர், முதல்வர் ஜெயலலிதா," என, வருவாய்த்துறை அமைச்சர் செங்கோட்டையன் பேசினார்.
தமிழக முதல்வர் ஜெ., 64வது பிறந்தநாளை கொண்டாடுவது குறித்து தஞ்சை தெற்கு மாவட்ட அ.தி.மு.க., செயல்வீரர்கள் ஆலோசனைக்கூட்டம் நடந்தது. நகர செயலாளர் பண்டரிநாதன் வரவேற்றார்.
கூட்டத்தில் தலைமை நிலைய செயலாளரும், வருவாய்த்துறை அமைச்சருமான செங்கோட்டையன் பேசியதாவது:

முதல்வர் ஜெயலலிதாவுக்கும், காவிரி டெல்டா மாவட்டங்களுக்கும், ஒரு ஒற்றுமை இருக்கிறது. ஜூன் 6ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு, தண்ணீர் திறந்து விட்டு, விவசாயிகளை, "குளிர' வைத்தவர். திராவிட இயக்கத்தில், அண்ணாவுக்கு இதயமாக, எம்.ஜி.ஆர்., விளங்கினார். எம்.ஜி.ஆரின் ஒரே அரசியல் வாரிசாக, ஜெயலலிதா விளங்குகிறார். முதல்வரின் துரிதமான நிவாரண பணி, நடவடிக்கைகளை பார்த்து இந்தியா மட்டுமின்றி, உலகமே வியக்கிறது. விலையில்லா அரிசி, மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி, தாலிக்கு தங்கம், திருமண உதவித்தொகை இரட்டிப்பு, மாணவர்களுக்கு லேப்-டாப், சைக்கிள், இலவச சீருடை, விலையில்லா ஆடு, மாடு, ஓய்வூதியம், 1,000 ரூபாயாக உயர்வு என, பல்வேறு திட்டங்களை முதல்வர் தந்து வருகிறார். அவருடைய பிறந்தநாளில் நலத்திட்ட உதவிகளை ஏழை, எளியோருக்கு வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்.
இவ்வாறு அவர் பேசினார்.
தஞ்சை ஆலோசனைக்கூட்டத்தில் தெற்கு மாவட்ட அ.தி.மு.க., செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சருமான வைத்திலிங்கம் பேசியதாவது:
எம்.ஜி.ஆர்., இறந்தவுடன் கட்சியே இல்லாமல் ஆகி விடும் என, சிலர் கருதினர். அச்சமயத்தில் துரோகி, எதிரிகளை வீழ்த்தி, எம்.ஜி.ஆரை விட, 20 மடங்கு சக்தி வாய்ந்த இயக்கமாக, அ.தி.மு.க.,வை ஜெயலலிதா கட்டிக்காத்து வருகிறார். சில தலைவர்கள் பிறந்தநாள் கொண்டாடும்போது, ஏழைகளுக்கு, "கிள்ளி'க்கூட தர மாட்டார்கள். ஆனால், முதல்வர் ஜெயலலிதா, "அள்ளி'த்தரும் வகையில் தன் பிறந்தநாளை கொண்டாடுகிறார் என்றார்.

---------------------------------------------------------------------------------------------------------------

## கிராமங்களில் விரிவான கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்த முடிவு

**பதிவு செய்த நாள்** : பிப்ரவரி 06,2012,01:27 IST

**கருத்தை பதிவு செய்ய**
தஞ்சாவூர்: தஞ்சாவூர் ஆவின் பொதுமேலாளர் சவரிமுத்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பின் விபரம்:
தமிழக முதல்வரின் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, கறவை மாடுகள் வழங்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களில் கறவை மாடுகள் வழங்கப்படும். கிராமங்களில் செயல்படாத சங்கங்கள் இருப்பின் அவற்றை புதுப்பித்தும், சங்கங்கள் இல்லையென்றால் புதிய சங்கங்கள் அமைத்தும் திட்டப் பயனாளிகள் உற்பத்தி செய்யும் பாலை தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் பால்வழித்தடம் அமைத்து தொய்வின்றி சேகரித்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கறவை மாடுகள் வழங்கப்பட்ட சீராளூர், துறையூர், சக்கரசாமந்தம், வல்லம்புதூர், குருவாடிப்பட்டி, பள்ளியேறி, இருமூளை மற்றும் கட்டா நகரம் ஆகிய கிராமங்களை சேர்ந்த பயனாளிகளை தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பொதுமேலாளர், துணைப்பதிவாளர் (பால்வளம்) மற்றும் ஒன்றிய அலுவலர்கள், கால்நடை மருத்துவ ஆலோசகர்களுடன் மக்களை சந்தித்து கறவை மாடுகள் பராமரிப்பில் இன்னும் எத்தகைய உதவிகள் தேவைப்படுகின்றன என்பது குறித்து விசாரித்தனர்.
தூய பால் உற்பத்தி குறித்தும், பால் உற்பத்தி பெருக்கம் குறித்தும், கலப்புத் தீவனம் மற்றும் தீவன புல்லின் அவசியம் குறித்து விரிவாக தெரிவிக்கப்பட்டது.
பால் உற்பத்தியாளர்கள் சந்திப்பின் போது ஒன்றிய கால்நடை மருத்து ஆலோசகர்களை கொண்டு பயனாளிகள் கறவை மாடுகளுக்கு மருத்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்றியத்தால் விரிவான கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---------------------------------------------------------------------------------------------------------------

## உற்பத்திச் செலவு அதிகரிப்பால் கோழிப்பண்ணைகளை மூடும் நிலை

**பதிவு செய்த நாள்** : பிப்ரவரி 05,2012,23:17 IST

சின்னமனூர் : பிராய்லர் கோழி உற்பத்திச் செலவு அதிகரிப்பாலும், வாங்கும் விலையை கம்பெனிகள் குறைத்துள்ளதாலும், நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால், தமிழகம் முழுவதும், கோழிப் பண்ணைகள் மூடப்படும் நிலை உள்ளது.

தமிழகத்தில் 1 லட்சத்து 72 ஆயிரம் பிராய்லர் கோழி பண்ணைகள் உள்ளன. இவை, தனியார் நிறுவனங்களிடம் கோழிக் குஞ்சுகளை பெற்று, வளர்த்து கொடுக்கும் பண்ணைகளாகும். ஆறு மாதங்களாக, கறிக்கோழி விலை கிலோ 100 ரூபாய் முதல் 120 ரூபாய் வரை விற்பனையாகிறது.

மூன்று மாதங்களாக, பிராய்லர் கோழி மார்க்கெட்டில், எப்போதும் இல்லாத அளவில், வாங்கும் விலையை பிராய்லர் கம்பெனிகள் குறைத்துள்ளன. உற்பத்திச் செலவுகள், எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளன. இதனால், பண்ணையாளர்கள், அதிக நஷ்டமடைந்து வருகின்றனர்.

ஒரு கோழிக்குஞ்சு ரூ. 12.50க்கு கம்பெனிகள் கொடுக்கின்றன. அதை கோழியாக்க, 44 ரூபாய்க்கு இரண்டு கிலோ தீவனம், கொடுக்க வேண்டி உள்ளது. தடுப்பூசி, மருந்துகளுக்கு ரூ. 2.50ம், மின் கட்டணம் மற்றும் பராமரிப்பிற்கு ரூ. 2.50ம் செலவாகிறது. ஒரு கிலோ கோழியை உற்பத்தி செய்ய, ரூ.61.50 செலவாகிறது.

சிக்கன் கம்பெனிகளோ, கிலோ 42 ரூபாய்க்கு கொள்முதல் செய்வதால், கிலோவிற்கு ரூ. 19.50 நஷ்டமாகிறது. வங்கி கடன் பெற்று, கோழிப் பண்ணைகளை நடத்திவரும் பண்ணையாளர்கள், நஷ்டம் அடைந்து வருவதால், விரைவில் பண்ணைகளை மூடும் நிலை ஏற்பட்டுள்ளது.

---

## கயிறு தொழிலுக்கு புத்துயிர் அளிக்க தமிழக அரசு திட்டம்

**பிப்ரவரி** 06,2012,00:48



கயிறு தொழிலுக்கு புத்துயிர் அளிக்கும் வகையில், தமிழகத்தில், ஒன்பது மாவட்டங்களில் கயிறு குழுமங்களை அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.தமிழகத்தில், 3.56 லட்சம் ஹெக்டேரில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதிலிருந்து ஆண்டுதோறும், 400 கோடி தேங்காய்கள் கிடைக்கின்றன. தேங்காய் பிரித்தது போக, எஞ்சிய மட்டைகளில், 48 சதவீதம் கயிறு தொழிலுக்கு பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில், 73 கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 5,800 குறுந்தொழிலகங்கள் கயிறு பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. இவற்றின் மூலம் 3 லட்சத்துக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இதில் பெரும்பாலோர் பெண்கள் ஆவர்.

தேங்காய் நார் :இந்தியாவில், கயிறு உற்பத்தியில் கேரளாவும், தேங்காய் நார் உற்பத்தியில் தமிழகமும் முதலிடத்தில் உள்ளன. தமிழகத்தில் உற்பத்தியாகும் மொத்த தேங்காய் நாரில், 60 சதவீதத்திற்கும் அதிகமாக கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது.
தமிழகத்திலிருந்து குறைந்த விலையில், தேங்காய் நார்களை கொள்முதல் செய்யும் கேரளா, தரைவிரிப்பு, ரப்பர் கலந்த மிதியடி, நிலச்சரிவை தடுக்கும் தரைவிரிப்புகள் என மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றம் செய்து, அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இதன் மூலம், அம்மாநில அரசுக்கு ஆண்டுக்கு, 750 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கிறது.

ஏற்றுமதி அதிகரிக்கும்:தேங்காய் நாரினால் உருவாக்கப்படும் பொருட்களால், சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. இதனால், உலகின் பல நாடுகளில் இவற்றிற்கான தேவையும் அதிகளவில் உள்ளது. இதை கருத்தில் கொண்டு, தமிழகத்தில், கயிறு தொழிலை ஊக்குவிக்கும் வகையில், வரும், 12வது ஐந்தாண்டு திட்ட காலத்தில், தலா ஒரு கோடி ரூபாய் முதலீட்டில், ஒன்பது கயிறு தொழில் குழுமங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில், முதல் கட்டமாக, நடப்பாண்டில் பொள்ளாச்சி, கன்னியாகுமரி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்படுகின்றன.இதன் மூலம், கயிறு பொருட்களை தயாரிப்போர், ஒரே இடத்தில் ஒரு தொகுப்பாக இணைந்து தொழில் செய்ய முடியும். இதனால், தமிழகத்திலிருந்து அதிகளவில், மதிப்புக் கூட்டப்பட்ட கயிறு பொருட்கள் ஏற்றுமதியாகும்.

தனி விற்பனை நிலையம்:கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் விற்பனை செய்வதற்கு அரசின் சார்பில், பூம்புகார் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் உள்ளன. இதைபோல, கயிறு பொருட்களை விற்பனை செய்வதற்கு, தனி விற்பனை நிலையங்களை தமிழக அரசு உருவாக்க வேண்டும்.

இதுகுறித்து பெயர் வெளியிட விரும்பாத அதிகாரி ஒருவர் கூறும்போது,
''கேரளாவில், கயிறு தொழிலை முக்கியமாக கருதி, அம்மாநில அரசு, இதற்கென்றே தனி அமைச்சரை நியமித்து, அத்தொழிலுக்கு ஊக்கமளித்து வருகிறது. தமிழகத்தில் கயிறு தொழிலில், திறன் வாய்ந்த பணியாளர்கள் இல்லை. இத்தொழிலில், ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயிற்சியளிக்க அரசு முன்வர வேண்டும். இதன் மூலம், அரசுக்கு வருவாய் கிடைப்பதுடன், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு பெருகும்' என்றார்.கயிறு குழுமங்கள்:பொள்ளாச்சி, கன்னியாகுமரி, திண்டுக்கல், திருநெல்வேலி, மதுரை, புதுக்கோட்டை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர் ஆகிய ஒன்பது இடங்களில் கயிறு குழுமங்கள் அமைய உள்ளன.

ஏற்றுமதி வருவாய்:தமிழகத்திலிருந்து, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு அதிகளவில் தென்னை நார் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சென்ற 2009-10ல், 81 ஆயிரத்து 272 டன் தென்னை நார் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், 117.50 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. கடந்த 2010-11ம் நிதியாண்டில், 1 லட்சத்து 60 ஆயிரம் டன் ஏற்றுமதி செய்ததன் மூலம், 300 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.- வீ.அரிகரசுதன் -

----------------------------------------------------------------------------------------------------------------

தொடரும் பனியால் கருகும் தேயிலை தோட்டங்கள்

பிப்ரவரி 06,2012,00:47

குன்னூர்:நீலகிரியில் தொடரும் பனிப்பொழிவால், தேயிலை உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. "உறைபனியால் 812 ஹெக்டேரில் தேயிலைச் செடிகள் கருகி, 2.15 கோடி ரூபா# அளவுக்கு, வர்த்தக இழப்பு ஏற்பட்டுள்ளது' என, கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.நீலகிரியில் பல்லாயிரம் ஹெக்டேரில், தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. தேயிலை தோட்டங்களில் பறிக்கப்படும் பசுந்தேயிலை, தொழிற்சாலைகள் மூலம் தேயிலை தூளாக உற்பத்தி செய்யப்பட்டு, குன்னூர் தேயிலை ஏல மையம் மூலம், வாரந்தோறும் விற்கப்படுகிறது.



பொதுவாக, நீலகிரியில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் நிலவும் பனிப்பொழிவால், தேயிலைச் செடிகள் பனியால் பாதிக்கப்பட்டு மகசூல் குறையும். இந்த பாதிப்பு, ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் இயல்பு நிலைக்கு திரும்பும்.நவம்பர், டிசம்பர் மாதங்களில் மட்டுமே நிலவும் பனியின் தாக்கம், நடப்பாண்டு ஜனவரி மாதம் முடிந்த நிலையிலும் தொடர்வதால், தேயிலை வர்த்தக வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது என, குன்னூர் கோத்தாரி வேளாண்மை மேலாண்மை மையத்தில் நடந்த கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

கருத்தரங்கில், சர்வதேச நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் பேசியதாவது:
நீலகிரியில் பனிப்பொழிவின் தாக்கம் அதிகரித்துள்ளது. கிராமப்புறங்களில் பூஜ்ஜியம், ஒரு டிகிரி வெப்பநிலை நிலவியதால், பல இடங்களில் உறைபனி விழுந்துள்ளது; ஏலத்துக்கு வரும் தேயிலைத் தூள் வரத்து, குறைந்து கொண்டே வருகிறது. குன்னூர் தேயிலை ஏல மையத்தில், ஜனவரி முதல் வாரம் நடந்த முதல் ஏலத்தில், 13.86 லட்சம் கிலோ, 2வது ஏலத்தில் 14.89 லட்சம் கிலோ, 3வது ஏலத்தில் 11.22 லட்சம் கிலோ தேயிலை தூள் ஏலத்துக்கு வந்தது. கடந்த மாத இறுதியில் நடந்த நான்காவது ஏலத்தில், 10.21 லட்சம் கிலோவாக குறைந்த தேயிலை தூள் வரத்து, இந்த வாரம் நடந்த 5வது ஏலத்தில், 10.15 லட்சம் கிலோவாக குறைந்துள்ளது; கடந்த 11 வார ஏலத்தில், இதுவே மிகக் குறைந்த அளவு.

வழக்கத்துக்கு மாறாக, நடப்பாண்டு நகர்ப்புறங்களில் கூட பனியின் தாக்கத்தை அதிகமாக உணர முடிந்தது. பனியால், நீலகிரியில் 812 ஹெக்டேர் பரப்பில், தேயிலை தோட்டங்கள் கருகியுள்ளன. கருகிய தேயிலை தோட்டங்களில், மீண்டும் பசுந்தேயிலை தழைத்து வளர, மூன்று மாதங்கள் பிடிக்கும்; தற்போது தேயிலை ஏலத்தில் ஒரு கிலோ தேயிலை தூளுக்கு சராசரியாக, 70 ரூபாய் விலை கிடைக்கும் நிலையில், மூன்று மாத சாகுபடி இழப்பு மூலம், 2.15 கோடி அளவுக்கு வர்த்தக இழப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு, சுந்தர் பேசினார்.

------------------------------------------------------------------------------------------------------------

சாதனை படைக்கும் ஏலக்காய் உற்பத்தி- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -

பிப்ரவரி 06,2012,00:44

நடப்பாண்டு, நாட்டின் ஏலக்காய் உற்பத்தி, 30 சதவீதம் அதிகரித்து, சாதனை அளவாக 21 ஆயிரம் டன்னை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.உற்பத்தி உயர்வு:கடந்த ஆண்டு ஒரு கிலோ ஏலக்காய்,

2,000 ரூபாய் வரை விலை போனது. இதனால், மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள், ஏலக்காய் சாகுபடி பரப்பளவை அதிகரித்தனர். இதன் காரணமாக, ஏலக்காய் உற்பத்தி உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு, 16 ஆயிரம் டன் ஏலக்காய் உற்பத்தி செய்யப்பட்டது. 2004-05ம் ஆண்டில், அதிகபட்சமாக 17 ஆயிரம் டன் ஏலக்காய் உற்பத்தியானது.:சென்ற ஆண்டு, சந்தையில் ஏலக்காய் வரத்து அதிகரித்ததால், தற்போது அதன் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.



நடப்பாண்டு, நாட்டின் ஏலக்காய் உற்பத்தி, 30 சதவீதம் அதிகரித்து, சாதனை அளவாக 21 ஆயிரம் டன்னை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.உற்பத்தி உயர்வு:கடந்த ஆண்டு ஒரு கிலோ ஏலக்காய், 2,000 ரூபாய் வரை விலை போனது. இதனால், மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள், ஏலக்காய் சாகுபடி பரப்பளவை அதிகரித்தனர். இதன் காரணமாக, ஏலக்காய் உற்பத்தி உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு, 16 ஆயிரம் டன் ஏலக்காய் உற்பத்தி செய்யப்பட்டது. 2004-05ம் ஆண்டில், அதிகபட்சமாக 17 ஆயிரம் டன் ஏலக்காய் உற்பத்தியானது.:சென்ற ஆண்டு, சந்தையில் ஏலக்காய் வரத்து அதிகரித்ததால், தற்போது அதன் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

2,000 ரூபாய்க்கு விலை போன ஒரு கிலோ ஏலக்காய், தற்போது, கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, 600 ரூபாயாக வீழ்ச்சியடைந்தது.இனி, இதற்கும் மேலாக விலை குறையாது என்று எதிர்பார்க்கப்படுவதால், 7 மி.மீ., மற்றும் 8 மி.மீ., ஏலக்காய் வகைகளை, விவசாயிகளும், மொத்த விற்பனையாளர்களும் இருப்பு வைக்கத் துவங்கியுள்ளனர். வரும் மாதங்களில் ஏற்றுமதி வாய்ப்பு பெருகி, விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில், அவர்கள் கிடங்குகளில் ஏலக்காயை சேமித்து வருகின்றனர்.ஏற்றுமதி:அதற்கேற்ப, நடப்பு 2011-12ம் நிதி ஆண்டின், ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் சிறிய வகை ஏலக்காய் ஏற்றுமதி அதிகரித்து 3,100 டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற 2010-11ம் நிதி ஆண்டின் இதே காலத்தில் 570 டன்னாக இருந்தது.

இதே காலத்தில், பெரிய வகை ஏலக்காய் ஏற்றுமதி, 48 சதவீதம் உயர்ந்து 380 டன்னில் இருந்து 475 டன்னாக உயர்ந்துள்ளது."கவுதமாலா நாட்டின் ஏலக்காயை விட, இந்திய ஏலக்காய் தரமுள்ளதாக உள்ளது. அதனால், வரும் மார்ச் மாதத்திற்குள் சிறிய வகை ஏலக்காய் ஏற்றுமதி 5,000 டன்னை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்று மும்பையைச் சேர்ந்த ஏற்றுமதியாளர் முல்ராஜ் ருபரல் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து, மேற்கு ஆசியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அதிக அளவில் ஏலக்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. பொதுவாக, ஒரு பருவத்தில் நான்கு முறை மட்டுமே ஏலக்காய் பறிக்கப்படுவது வழக்கம். ஆனால், நடப்பாண்டு ஏலக்காய் உற்பத்தி அதிகமாக இருக்கும்

என்பதால், ஐந்து முறை ஏலக்காய் பறிப்பு பணிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.இந்தியாவில் ஆண்டுக்கு 12,000 - 14,000 டன் ஏலக்காய் பயன்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

-----------------------------------------------------------------------------------------------------------------

மிளகாய் வற்றல் விலை வீழ்ச்சி

பிப்ரவரி 05,2012,03:19



மேட்டூர் : கொளத்தூர் சந்தையில், இரு வாரமாக மிளகாய் வற்றல் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இது, விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. கொளத்தூர் சுற்றுப்பகுதியில், ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில், விவசாயிகள் மிளகாய் சாகுபடி செய்துள்ளனர். ஆண்டுதோறும் ஜனவரி இறுதியில், மிளகாய் வற்றல், சந்தையில் விற்பனைக்கு வரத் துவங்கும். ஆனால், நடப்பாண்டு ஒரு மாதம் முன்னதாகவே, மிளகாய் வற்றல் விற்பனைக்கு வந்து விட்டது.

கடந்த ஆண்டு இதே மாதம் சந்தையில், ஒரு கிலோ மிளகாய் வற்றல், 80 ரூபாய்க்கு மேல் விற்பனையானது. சீஸன் உச்சத்தில் கிலோ, 100 ரூபாய் வரை விற்றது. கடந்த வாரம் கொளத்தூர் சந்தைக்கு, 1,000 கிலோ மிளகாய் வற்றல், விற்பனைக்கு வந்தது. ஆனால், கிலோ, 60 ரூபாய் முதல், 70 ரூபாய் வரை விற்பனையானது. நேற்று ஒரு கிலோ வற்றல் (முதல்ரகம்) ரூ.70 முதல் ரூ.73க்கு விற்பனையானது. நடப்பாண்டு, சீஸன் துவக்கத்தில் மிளகாய் வற்றல் விலை, வீழ்ச்சியடைந்து விவசாயிகளை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம், சந்தைக்கு மிளகாய் வற்றல் விற்பனைக்கு வர துவங்கும். ஆனால், நடப்பாண்டு ஒரு மாதத்துக்கு முன்பாகவே, விற்பனைக்கு வந்து விட்டதால், வற்றல் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இனி வரும் வாரங்களில் மிளகாய் வற்றல் விலை படிப்படியாக அதிகரிக்கத் துவங்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.


-----------------------------------------------------------------------------------------------------------------

வரத்து அதிகரிப்பால் தேங்காய் பருப்பு விலை வீழ்ச்சி!

பிப்ரவரி 05,2012,10:58

ஈரோடு: சீஸன் துவங்கியதால் சந்தைக்கு தேங்காய் பருப்பு வரத்து அதிகரித்துள்ளது. குவிண்டாலுக்கு 3,118 ரூபாய் விலை குறைந்துள்ளது.ஒவ்வொரு ஆண்டும் மூன்று கட்டமாக தேங்காய் பருப்பு சீஸன் துவங்குகிறது. தென்னையில், முதல் கட்ட காய்ப்பு மார்ச் - மே மாதம் வரையும், இரண்டாம் கட்ட காய்ப்பு ஜூலை - செப்டம்பர் மாதம் வரையும், மூன்றாம் கட்ட காய்ப்பு

நவம்பர் முதல் ஃபிப்ரவரி இறுதி வரை நிலவும். தற்போது, தேங்காய் பருப்பு சீஸன் உச்சத்தை எட்டியுள்ள நிலையில், வரத்தும் அதிகமாக உள்ளது.அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு, 2010-11 மார்ச் முதல் ஏப்ரல் வரை 16 ஆயிரத்து 321 டன் தேங்காய் பருப்பு வரத்தானது. மொத்தம், 39 லட்சத்து 27 ஆயிரத்து 389 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பு, 2011-2012ல் ஜனவரி மாதம் முதல் இதுவரை, 10 ஆயிரத்து 897 டன் வரத்தாகி உள்ளது. மேலும், ஏப்ரல் மாதம் வரை உள்ளதால், வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதன் காரணமாக விலையும் கிடுகிடுவென வீழ்ச்சி அடைந்து வருகிறது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.



ஈரோடு: சீஸன் துவங்கியதால் சந்தைக்கு தேங்காய் பருப்பு வரத்து அதிகரித்துள்ளது. குவிண்டாலுக்கு 3,118 ரூபாய் விலை குறைந்துள்ளது.ஒவ்வொரு ஆண்டும் மூன்று கட்டமாக தேங்காய் பருப்பு சீஸன் துவங்குகிறது. தென்னையில், முதல் கட்ட காய்ப்பு மார்ச் - மே மாதம் வரையும், இரண்டாம் கட்ட காய்ப்பு ஜூலை - செப்டம்பர் மாதம் வரையும், மூன்றாம் கட்ட காய்ப்பு நவம்பர் முதல் ஃபிப்ரவரி இறுதி வரை நிலவும். தற்போது, தேங்காய் பருப்பு சீஸன் உச்சத்தை எட்டியுள்ள நிலையில், வரத்தும் அதிகமாக உள்ளது.அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு, 2010-11 மார்ச் முதல் ஏப்ரல் வரை 16 ஆயிரத்து 321 டன் தேங்காய் பருப்பு வரத்தானது. மொத்தம், 39 லட்சத்து 27 ஆயிரத்து 389 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பு, 2011-2012ல் ஜனவரி மாதம் முதல் இதுவரை, 10 ஆயிரத்து 897 டன் வரத்தாகி உள்ளது. மேலும், ஏப்ரல் மாதம் வரை உள்ளதால், வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதன் காரணமாக விலையும் கிடுகிடுவென வீழ்ச்சி அடைந்து வருகிறது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஈரோடு விற்பனைக் குழு அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூட அலுவலர் கூறியதாவது:ஈரோடு தேங்காய் பருப்பு சந்தைக்கு சேலம், தர்மபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, வேலூர் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தேங்காய் பருப்பு வரத்தாகிறது. தவிர, ஈரோட்டில் மொடக்குறிச்சி, வெள்ளோடு, பூந்துறை, சிவகிரி, அறச்சலூர், கவுண்டச்சிபாளையம், சத்தி, கோபி உள்ளிட்ட பகுதியில் இருந்தும் வரத்தாகிறது.

இங்கு, திங்கள், வெள்ளி இரண்டு நாட்களில் தேங்காய் பருப்பு சந்தை நடக்கிறது. கேரளம், கோவை, கர்நாடகா, காங்கேயம் உள்ளிட்ட பகுதியில் இருந்து ஆயில் நிறுவனங்கள், நேரடியாக சந்தையில் தேங்காய் பருப்பு கொள்முதல் செய்கின்றனர். நடப்பு ஆண்டு சீஸனில் விளைச்சல் அதிகரிப்பால், தேங்காய் பருப்பு மூட்டைகள் குவிந்து வருகின்றன.சென்ற, 2011ல் நவம்பர் மாதம் தேங்காய் பருப்பு முதல் தரம் குவிண்டாலுக்கு 7,200 ரூபாய்க்கும், இரண்டாம் தரம் 6,700 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.தற்போது, முதல் தரம் குவிண்டாலுக்கு, 3,185 ரூபாய் குறைந்து, 4,015 ரூபாய், இரண்டாம் தரம் 3,350 ரூபாய் குறைந்து, 3,350 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மேலும் வரத்து அதிகரிக்கும் என்பதால், விலை சரிய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

---

தினகரன்

# முட்டைக் கோழி விலை கடும் வீழ்ச்சி

கருத்துகள்



00:23:41

Monday

2012-02-06

நாமக்கல் : முட்டைக் கோழியின் விலை தொடர்ந்து சரிந்து வருவதால் பண்ணையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இந்திய அளவில் கோழி முட்டை உற்பத்தியில் நாமக்கல் மண்டலம், 2ம் இடத்தை வகிக்கிறது. முட்டைக் கோழிகள் வளர்வதற்கான சீதோஷ்ண நிலை இங்கு இருப்பதால் 910க்கும் மேற்பட்ட பண்ணைகள் உள்ளன. இப்பகுதியில் மட்டும் முட்டைக்காக 2 கோடி கோழிகள் வளர்க்கப்படுகிறது. தமிழகத்தில் ஒரு நாளுக்கு 3 கோடி முட்டைகள் உற்பத்தியாகிறது. இதில் நாமக்கல்லில் மட்டும் ஒரு நாளுக்கு 2 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

முட்டைக் கோழிகள் தொடர்ந்து ஒன்றரை ஆண்டுகள் வரை மட்டுமே முட்டை உற்பத்தி செய்கின்றன. முட்டையிடும் தன்மை முடிந்தவுடன் இந்த கோழிகள்


இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுகிறது. குறிப்பாக கேரளாவுக்கு அதிக அளவில் முட்டைக்கோழிகள் விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில், நாமக்கல் மண்டலத்தில் கடந்த மாதம் 18ம் தேதி ஒரு கிலோ முட்டைக் கோழி ரூ.46 ஆக இருந்தது.

21ம் தேதி ரூ.42 ஆகவும், 23ம் தேதி ரூ.40 ஆகவும், 24ம் தேதி ரூ.38 ஆகவும், நேற்று ரூ.29 ஆகவும் படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளது. 15 நாளில் முட்டைக்கோழி விலையில் ரூ.17 குறைந்ததால் பண்ணையாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து பண்ணையாளர்கள் கூறுகையில், ‘‘நடப்பு ஆண்டில் முட்டையின் விலை ஏற்ற இறக்கத்துடன் உள்ளது. இதனால் பண்ணைகளில் வளர்க்கப்படும் முட்டைக் கோழிகளை பண்ணையாளர்கள் விற்று வருகின்றனர். அதிக இழப்பை தவிர்க்கவே முட்டைக் கோழிகளை பண்ணையாளர்கள் விற்கின்றனர்’’ என்றனர்.

-----------------------------------------------------------------------------------------------------------

# வெங்காயம் ஏற்றுமதி 10% அதிகரிப்பு

**கருத்துகள்**



00:21:19
Monday
2012-02-06

புதுடெல்லி: வெங்காயம் ஏற்றுமதிக்கு குறைந்தபட்ச விலையாக டன்னுக்கு 250 டாலர் என்று ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதனால், இந்தியாவின் வெங்காய ஏற்றுமதி 23 சதவீதம் வரை குறைந்தது. இந்நிலையில், வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையை 250 டாலரில் இருந்து 150 டாலராக மத்திய அரசு கடந்த ஆண்டு ஜனவரியில் குறைத்தது. இதையடுத்து, வெங்காய ஏற்றுமதி அதிகரித்தது. விலை குறைப்பால் வெங்காய ஏற்றுமதி 10 சதவீதம் அதிகரித்துள்ளதாக வேளாண்மை ஏற்றுமதி கழக தலைவர் அஜித் ஷா தெரிவித்தார். வெங்காய உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்து 2வது இடத்தில் இந்தியா உள்ளது.

---

தினத் தந்தி DAILY THANTHI

***ஏற்றுமதி விலை குறைப்பால்***

***வெங்காயம் ஏற்றுமதி அதிகரிக்க தொடங்கியது***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலை குறைக்கப்பட்டுள்ளதால் வெங்காயம் ஏற்றுமதி அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.*
*பெரிய வெங்காயத்திற்கான ஏற்றுமதி விலை டன்னுக்கு 250 டாலரிலிருந்து 150 டாலராக குறைக்கப்பட்டுள்ளது. சின்ன வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை டன்னுக்கு 300 டாலரிலிருந்து 250 டாலராக குறைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஜனவரி மாதத்தில் 1.21 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, 2011 டிசம்பர் மாதத்தை விட 362 டன் அதிகமாகும்.*
*வெங்காயம் உற்பத்தியில் சர்வதேச அளவில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளன. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இந்தியாவின் வெங்காயம் ஏற்றுமதி 23 சதவீதம் சரிவடைந்திருந்தது. ஏற்றுமதி விலை டன்னுக்கு 250 டாலராக இருந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். அப்போது சீனா மற்றும் எகிப்து நாடுகளின் வெங்காயம் விலை 200 டாலராக இருந்தது. இதனால் அப்போது அந்த நாடுகளின் ஏற்றுமதி விறுவிறுப்பாக இருந்தது.*

---